# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்:377/பேரூ/2025**
**நாள் : 09 .02..2026**

பெ. இராசமாணிக்கம்,
சங்ககிரி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அரசிராமணி பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ. குள்ளம்பட்டி அஞ்சல் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பெ. இராசமாணிக்கம் என்பவரது 17.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.10.2025 அன்று பெறப்பட்டு, 377/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ. குள்ளம்பட்டி அஞ்சல் என்ற முகவரியை சேர்ந்த திரு. பெ. இராசமாணிக்கம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 17.10.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள 07.05.2024, 26.11.2024 மற்றும் 13.09.2025 நாளிட்ட மனுக்களில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. பெ. இராசமாணிக்கம் என்பவரின் மனைவி திருமதி R. சிவகாமி உட்பட கீழே குறிப்பிடப்பட்டுள்ள 6 நபர்களும் ஒன்று சேர்ந்து 07.05.2024 நாளிட்ட உறுதிமொழிச் சான்றை அரசிராமணி பேரூராட்சிக்கு அளித்துள்ளனர். அதில் -

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ. குள்ளம்பட்டி அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் 1. திரு. K. ஈசன், 2. திரு. V. கார்த்தி, 3. திருமதி. K. தனலட்சுமி, 4. திரு. P. தனபால், 5. திருமதி. K. ஜானகி மற்றும் 6. திருமதி. R. சிவகாமி ( மனுதாரர் பெ. இராசமாணிக்கம் என்பவரின் மனைவி) ஆகிய எங்கள் ஆறு குடும்பங்களுக்கு அரசிராமணி பிட்-1-ல் புல எண். 208/5 புஞ்.ஹெக் 0.38க்கு ஏக். 0.94 தீர். ரூ.2.12 இதில் பு.ஏ. 0.47 செண்ட் நிலத்தில் எங்களுக்கு சொந்தமான இந்த நிலத்தில் வடக்கு புறமாக பொது வழித்தடமாக சுமார் 200 அடி நீளத்தில் வரிசை

எண். 1 மற்றும் 2-ல் உள்ளபடி இரு நபருக்கும் தலா 10 அடி அகலத்திற்கும் மீதமுள்ள 3 முதல் 6 முடிய உள்ள 4 நபர்களுக்கும் 8 அடி அகலத்திற்கும் பொது நடைபாதை கழிக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம். இந்த நடைபாதைக்கு சுமார் 20 வருடங்களாக தார்சாலையோ, சிமெண்ட் சாலையோ, பேவர் பிளாக் சாலையோ இல்லாமல் உள்ளது. இந்த சாலையும், நிலமும் இனி அரசிராமணி பேரூராட்சி அலுவலக கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது என்பதை மேலே தெரிவித்த ஆறு குடும்பத்தாரும் ஒப்புக்கொள்கிறோம்.

இந்த சாலைக்கு நான்கு எல்லை:- எடப்பாடி to குமாரபாளையம் மெயின் சாலைக்கும் (கி) எங்களின் வரிசை எண். 1 to 5 பேரின் வீட்டிற்கும் (வ) சுப்பரமணி நிலத்திற்கும் (தெ) சிவகாமி நிலத்திற்கும் (மே) இதன் மத்தியில் கிழமேற்காக சுமார் 200 அடி நீளம் கொண்ட பொது நடைபாதை உள்ளது.

எனவே மேலே கண்ட சுமார் 200 அடி நீளமுள்ள கிழமேற்கு பொதுப் பாதைக்கு தார்சாலை அல்லது சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைத்துக் கொடுக்குமாறு அரசிராமணி பேரூராட்சி நிர்வாகத்தை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மேலும் இதில் ஏதேனும் பின்னால் வில்லங்கம் ஏற்பட்டால் அதற்கு நாங்கள் ஆறு குடும்பமும் முழு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறோம் என்பதை இதன் மூலம் உறுதி கூறுகிறோம்." என தெரிவித்துள்ளார்.

மேற்காணும் உறுதிமொழி பத்திரத்தை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ஆறு நபர்களின் வீட்டிற்கும் தடபாத்தியம் என ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதை ஊர்ஜிதம் செய்ய முடியாத நிலை உள்ளது என பேரூராட்சி செயல் அலுவலரின் 20.05.2024 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு ஆதாரமாக திரு. K. ஈசன் பெயரில் உள்ள 23.07.2023 நாளிட்ட சுத்த கிரைய பத்திரத்தில் K. ஈசன் முதல் கடைசியாக உள்ள திருமதி. K. சிவகாமி நிலம் வரை தடபாத்தியம் உள்ளதற்கு விவரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது என மனுதாரர் 26.11.2024 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சிக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் மனுதாரர், அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலருக்கு சமர்ப்பித்த 13.09.2025 நாளிட்ட மனுவில் அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட 5வது வார்டில் தனியாருக்கு சொந்தமான புல எண். 248-ல் தனியார் எவ்வித தானபத்திரமும் பேரூராட்சிக்கு வழங்காமல், சுமார் 500 அடி நீளத்திற்கு முறைகேடாக சாலை அமைக்கும் பணியானது பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என புகாராக தெரிவித்து புல எண். 208/5-ல் சுமார் 232 அடி நீளமுள்ள மண் நடைபாதைக்கு சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைக்க ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 05.12.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 250/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

சேலம் மாவட்டம், அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட அரசிராமணி பிட் -1 கிராமம் புல எண் 208/5-ல் சாலை அமைத்து கொடுக்கக் கோரியது; மற்றும் அரசிராமணி பிட்-1 புல எண். 248-ல் சாலை அமைத்து வருவதற்கான ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைக்க கோரி மனுதாரர் 13.09.2025 நாளிடப்பட்ட மனுவை இப்பேரூராட்சிக்கு அளித்துள்ளார்.

மேற்படி மனுதாரர் திரு. இராசமாணிக்கம் என்பவரால் கடந்த 07.05.2024ஆம் தேதியில் 1. திரு. K. ஈசன், 2. திரு. V. கார்த்தி, 3. திருமதி. K. தனலட்சுமி, 4. திரு. P. தனபால், 5. திருமதி. K. ஜானகி, 6. திருமதி. R. சிவகாமி ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட உறுதிமொழிச் சான்றில் அரசிராமணி பிட்-1 கிராமம் புல எண். 208/5, புஞ்.ஹெக் 0.38ற்கு ஏக். 0.94, தீர். ரூ.2.12. இதில் பு.ஏ. 0.47 செண்ட் நிலத்தில் இவர்களுக்கு சொந்தமான நிலத்தில் வடக்கு புறமாக பொது வழித்தடமாக சுமார் 200 அடி நீளத்திற்கு பொது நடைபாதை என தெரிவித்து அதற்கு சிமெண்ட் சாலை (அல்லது) பேவர் பிளாக் சாலை அமைத்து கொடுக்குமாறு மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி மனுவிற்கு பேரூராட்சியின் அலுவலக கடித ந.க.எண். 152/2024, நாள் 20.05.2024ல் புல எண். 208/5-ல் பாதை என ஒதுக்கப்பட்டுள்ளதன் விவரம் ஊர்ஜிதம் செய்ய முடியாததால், மேற்படி நிலத்திற்கு பத்திரப் பதிவு மற்றும் வருவாய்த் துறை ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் சாலைகள் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என பதில் அனுப்பப்பட்டது.

இதனையடுத்து மனுதாரர் திரு. இராசமாணிக்கம் என்பவரால் கடந்த 26.11.2024ஆம் நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட மனுவில் குறிப்பிடப்பட்ட திரு. K. ஈசன் என்பவரது கிரைய பத்திர நகல் இணைத்து 232 அடி நீளமுள்ள நடைபாதைக்கு சிமெண்ட் அல்லது பேவர் பிளாக் சாலை அமைத்து தர கோரப்பட்டது.

இதனையடுத்து உறுதிமொழி சான்றில் குறிப்பிடப்பட்ட ஒருவரான திருமதி. K. தனலட்சுமி என்பவரால் கடந்த 10.12.2024ஆம் தேதியில் சர்வே எண். 208/5-ல் பொது வழி தடத்தில் திரு. இராசமாணிக்கம் என்ற தனி நபர் மட்டும் தனது சொந்த பயன்பாட்டிற்கு பயன்படும் விதமாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டு சுரேஷ் என்பவர் இடம் வரை மட்டும் பொது இடம் இருப்பதாகவும் திரு. இராசமாணிக்கம் இடம் வரை பொது தடம் இல்லை என கூறி நிலத்தடி நீர்த்தொட்டி கட்டி பயன்படுத்தி வருவதாகவும், இதனால் நில அளவையர் மூலம் அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி பொது வழித் தடத்தை மீட்டு தந்த பின்பு பொது வழி தடத்தில் சாலை அமைக்குமாறு ஆட்சேபனை கடிதம் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி பொது நடைபாதையில் சாலை அமைக்க ஆட்சேபனை இருப்பதால் பேரூராட்சி அலுவலக கடித எண். 152/2024, நாள் 26.12.2024-ல் மனுதாரரால் குறிப்பிடப்பட்ட 1. K. ஈசன், 2. திரு. V. கார்த்தி, 3. திருமதி. K. தனலட்சுமி, 4. திரு. P. தனபால், 5. திருமதி. K. ஜானகி, 6. திருமதி. R. சிவகாமி ஆகிய 6 நபர்களிடமிருந்து தடபாத்தியம் 232 சதுர அடியினை செயல் அலுவலர், அரசிராமணி பேரூராட்சி என்ற பெயருக்கு தர செட்டில்மெண்ட் செய்து வைக்கப்படும் பட்சத்தில் பேரூராட்சி மூலம் சாலை அமைக்கப்படும் என தெரிவித்து பதில் அனுப்பப்பட்டது.

அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட அரசிராமணி பிட்-1 கிராமம் புல எண். 248/2A-ல் 1. திரு. M. வீரபத்திரன்,. 2. திரு ராஜு, 3. திரு. A. ராமச்சந்திரன், 4. திரு. A. சோமசுந்தரம், 5. திருமதி. N. பானுபிரியா, 6. திரு. M. கோவிந்தராஜ், 7. திரு. M. தங்கராசு 8. திருமதி. R. கல்யாணி ஆகிய எட்டு நபர்களுக்கு சர்வே எண். 248/2A–ல் ஏற்பட்ட பத்திரப் பதிவு ஆவணங்களின்படி அனைவரது நிலத்தின் ஓரமாக 8 அடி அகலத்திற்கு தடம் என ஒதுக்கப்பட்டதில் கான்கிரீட் அல்லது தார்சாலை அமைத்து தர கோரி கடந்த 13.11.2024-ல் உறுதிமொழி பத்திரம் பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்கண்ட எட்டு நபர்களால் மேற்சொன்ன 8 அடி அகல தடப்பாத்தியத்திற்கு கடந்த 12.02.2025ஆம் தேதியன்று பொது தட வழி பாத்திய ஒப்பந்த பத்திரம் அரசிராமணி பேரூராட்சியின் செயல் அலுவலர் அவர்களுக்கு நோட்டரி வழக்கறிஞர் அவர்களிடம் கையொப்பம் பெற்று பேரூராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்பின் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லாததால் அப்பகுதி பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு 15வது ஆணைய நிபந்தனையற்ற மான்யம் இரண்டாம் தவணை 2024-25-ன் கீழ் ச.வே எண். 248-ல் சிமெண்ட் சாலை அமைக்க பணி தேர்வு செய்யப்பட்டு பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 4759/2020/உ2 நாள் 31.01.2025ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு,

தொழில்நுட்ப அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, சிமெண்ட் சாலை அமைக்க வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்றது என்ற விவரத்தினை இதன் மூலம் தெரிவித்து கொண்டு சர்வே எண். 208/5-ற்கான ஆட்சேபனை கடிதம் மற்றும் சர்வே எண். 248/2A-ற்கான உறுதிமொழி பத்திர நகலை இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. பெ. இராசமாணிக்கம் மற்றும் எதிர்மனுதாரரான அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 08.01.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. பெ. இராசமாணிக்கம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன் ஆஜராகாமல் தனது 07.01.2026 நாளிட்ட இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

17.10.2025 நாளிட்ட எனது முறையீட்டு மனுவில் எதிர்மனுதாரராக நெம்பர் 1 ஆக அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களையும் நெம்பர் 2 ஆக சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களையும் சேர்த்திருந்தேன். இந்நிலையில் எனக்கு எந்த தகவலும் எழுத்துமூலம் தெரிவிக்காமல் விசாரணைக்கான அழைப்பாணையில் எதிர்மனுதாரரான பேரூராட்சி உதவி இயக்குநர் அவர்களை வழக்கிலிருந்து நீக்கி உள்ளீர்கள். இதுபோன்று நீக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்றும் நடுவரின் / செயலாளரின் உயர் அலுவலரின் முழு விலாசமும் கேட்டும் இந்த இரண்டுக்கும் நாளது தேதி வரை எந்த பதிலும் எனக்கு தாங்கள் கொடுக்கவில்லை.

எனவே இந்த வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரராக சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களை சேர்த்து 08.01.2026ந் தேதிய விசாரணையை வேறு ஒரு தேதிக்கு விசாரணையை ஒத்திவைத்து விரைவில் எனக்கு எழுத்து மூலமாக உத்தரவை பிறப்பித்தால் அந்த தேதியில் நான் விசாரணையில் கலந்துகொள்கிறேன் என்பதை தங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் 08.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் -

(i) <u>புல எண். 248/2A-ல் சிமெண்ட் சாலை அமைக்காதது குறித்து:-</u>

➢ மனுதாரர் திரு. பெ. இராசமாணிக்கம் என்பவர் 07.05.2024 அன்று பேரூராட்சியில் சமர்ப்பித்த

(1) திரு. ஈசன்
(2) திரு. கார்த்தி
(3) திருமதி. தனலட்சுமி
(4) திரு. தனபால்
(5) திருமதி. ஜானகி
(6) திருமதி. சிவகாமி ஆகியோரின் உறுதிமொழி பத்திரத்தில் புல எண். 208/5-ல் சுமார் 200 அடி பொது பாதைக்கு சிமெண்ட் (அல்லது) பேவர் பிளாக் சாலை அமைக்கக் கோரியதில், உரிய பத்திரப் பதிவு அல்லது வருவாய்த் துறை ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. இதில் திரு. ஈசன் என்பவரின் ஆவணம் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டது. இதர 5

நபர்களின் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகையால் மேற்படி ஆவணங்கள் இல்லாமையால் பாதை அமைப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

- மனுதாரர், 26.11.2024 அன்று திரு. ஈசன் என்பவரது கிரைய பத்திர நகலை சமர்ப்பித்து மேற்படி புல எண். 208/5-ல் 232 அடி நீளமுள்ள பாதைக்கு சிமெண்ட் (அல்லது) பேவர் பிளாக் அமைக்கக் கோரினார்.

- இதற்கிடையில் உறுதிமொழி சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள திருமதி. தனலட்சுமி என்பவர் மேற்படி 208/5-ல் உள்ள பொதுவழி தடத்தில் திரு. இராசமாணிக்கம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து நிலத்தடி நீர் தொட்டி கட்டியுள்ளார் எனவும், நில அளவையர் மூலம் அளந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலை அமைக்குமாறு தெரிவித்து 10.12.2024-ல் திருமதி. தனலட்சுமி தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

- எனவே, உறுதிமொழி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அனைவரும் பேரூராட்சி பெயரில் தானப்பத்திரம் சமர்ப்பிக்கும்பட்சத்தில் 232 சதுர அடி இடத்தில் சிமெண்ட் சாலை அமைக்கப்படும் என மனுதாரருக்கு 26.12.2024 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

<u>(ii) புல எண். 248/2 A-ல் அமைக்கப்பட்டது குறித்து செயல் அலுவலரின் அறிக்கை:</u>

- பேரூராட்சிக்குட்பட்ட 8 குடும்பத்தினருக்கு சொந்தமான புல எண். 248/2A-ல் பொது பாதையில் சிமெண்ட் சாலை அமைக்கக் கோரி 12.02.2024 அன்று உறுதிமொழி பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையிலும், நோட்டரி வழக்கறிஞர் மூலம் 12.02.2025 நாளிட்ட பொது தடவழி பாத்திய ஒப்பந்தப் பத்திரத்தை மேற்படி 8 குடும்பத்தினர் பேரூராட்சிக்கு சமர்ப்பித்ததின் அடிப்படையிலும், இதில் எவ்வித ஆட்சேபணையும் பெறப்படாததாலும் 15வது ஆணைய நிபந்தனையற்ற மானியம் இரண்டாம் தவணை 2024-2025ன் கீழ் 31.01.2025 அன்று பேரூராட்சிகளின் ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் புல எண். 248/2A-ல் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மேலும், 8 குடும்பத்தினருக்கு சொந்தமான புல எண். 248/2A-ல் பொது பாதையை அனைவரும் ஒன்று சேர்ந்து எடப்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பொதுப் பாதையை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களுக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுக்கிறோம் என்று உறுதியளித்து மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

- திரு. சுரேஷ் என்பவர் இடம் வரை பொது தடம் உள்ளதாகவும், இராசமாணிக்கம் இடம் வரை பொது தடம் இல்லை என கூறி நிலத்தடி நீர்த்தொட்டி கட்டி பயன்படுத்தி வருவதாகவும், இதனால் நில அளவையர் மூலம் திரு. இராசமாணிக்கம் என்பவரின் குடியிருப்பு இறுதி இடத்தில் இருந்து பிரதான சாலை வரை பொது நடைபாதையில் உள்ள பொதுக் கம்பமும் திரு. ஈசன் மற்றும் திரு. வரதராஜன் என்பவர்களின் பொது தடத்தில் உள்ள துணை மின் கம்பமும் பொது வழி தடத்தை ஆக்கிரமித்துள்ளதால், மேற்கூறிய அனைத்து நபர்களும் நில அளவையாளர் மூலம் அதனை அகற்றி வழித்தடத்தை மீட்டு தந்த பிறகு மற்றும் அனைவரும் ஒன்று சேர்ந்து சாலை அமைக்கும் மனு, உறுதிமொழி பத்திரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட தானபத்திரம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் சாலை அமைப்பது

குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. பெ. இராசமாணிக்கம் என்பவரின் புகார்மனு மற்றும் எதிர்மனுதாரரான அரசிராமணி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 17.10.2025 நாளிட்டு முறையீட்டு மனுவில், சேலம் மாவட்டம், அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரரின் குடும்பம் உட்பட 6 குடும்பங்களுக்கு சொந்தமான புல எண். 208/5-ல் அமைந்துள்ள சுமார் 232 அடி நீளமுள்ள பொதுவழி தடமாக உள்ள மண்சாலையில் சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைக்க கோரி உரிய ஆவணங்களான உறுதிமொழி பத்திரம் மற்றும் கிரைய பத்திரம் சமர்ப்பித்தும் பேரூராட்சி செயல் அலுவலர் சாலை அமைத்து தர மறுப்பதாக புகார் தெரிவித்துள்ளார்.

மேலும், பேரூராட்சிக்குட்பட்ட 5வது வார்டில் தனியாருக்கு சொந்தமான புல எண். 248-ல் சுமார் 500 அடி நீளத்திற்கு எவ்வித தான பத்திரமின்றி முறைகேடாக பேரூராட்சியால் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் 17.10.2025 நாளிடப்பட்ட முறையீட்டு மனு குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் 08.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் திரு. பெ. இராசமாணிக்கம் என்பவருக்கும் மற்றும் எதிர்மனுதாரரான அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலருக்கும் உரிய அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் திரு. இராசமாணிக்கம் தனது 07.01.2026 நாளிட்ட கடிதத்தில் தான் புகார் மனுவில் எதிர்மனுதாரராக (1) அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் (2) சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட அழைப்பாணையில், சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் பெயரை தவிர்த்து, அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலரின் பெயரை மட்டும் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருப்பதால், தன்னால் விசாரணைக்கு வர இயலாது எனவும், உதவி இயக்குநரின் பெயரை நீக்கியதற்கான காரணம் மற்றும் மேற்படி இருவர்களையும் சேர்த்து விசாரணை செய்யும்பட்சத்தில் பிரிதொரு நாளில் விசாரணை நடத்தினால் கலந்துகொள்வதாக தெரிவித்து, 08.01.2026 அன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு. இராசமாணிக்கம் ஆஜராகவில்லை.

நீதிமுறைச் சார்புடைய (Quasi-judicial) அமைப்பான இம்முறைமன்ற நடுவத்தில் பேரூராட்சிகளின் செயல்பாடுகள் குறித்தான புகார் மனுக்கள் வரப்பெற்றதும், அம்மனுக்களை பரிசீலித்து சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்படும். அவ்வறிக்கையை ஆய்வு செய்து, முதற்கண் மனுதாரரையும் மற்றும் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரையும் நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டு உரிய விசாரணை மேற்கொண்டு இருவரது வாக்குமூலங்கள் பெறப்படும். அவ்விசாரணையின்போது, எடுத்துரைக்கப்படும் வாதங்களின் அடிப்படையிலும் மற்றும் புகாரின் தன்மை அடிப்படையிலும் தேவைப்படின் கூடுதலாக தொடர்புடைய அலுவலர்களையும் நேரடி விசாரணை மேற்கொண்டு அவர்களது வாக்குமூலமும் பெறப்பட்டு அதனையும் ஆய்வு செய்து உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

இவ்வாறு இருக்கையில், மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரரின் குடும்பம் உட்பட 8 குடும்பங்களுக்கு சொந்தமான புல எண். 208/5ல் உள்ள மண் சாலையில் சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைக்க கோரியும், அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி சாலையினை அமைத்து தர மறுப்பதாக அளித்துள்ள புகார் குறித்து, பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்பட்ட நிலையில் முதற்கண் மனுதாரரையும், அரசிராமணி பேரூராட்சி செயல் அலுவலரையும்

நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரருக்கு தனது தரப்பு வாதங்களை விசாரணையில் தெரிவிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி விசாரணையில் மனுதாரர் ஆஜராகாமல் நீதிமுறை சார் அமைப்பிற்கு 07.01.2026 நாளிட்ட கடிதத்தின் மூலம் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரையும் விசாரணைக்கு அழைக்க வேண்டும் என பணிப்பது ஏற்புடையதன்று.

நீதிமுறைச் சார் (Quasi-judicial) அமைப்பை கையாள்வதற்கான பொருத்தமான முறையானது நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளிப்பதும், அதிகார அமைப்பு கையாள வேண்டிய நடைமுறைகள் குறித்து கடிதம் அனுப்புவதை தவிர்ப்பதுமாகும்.

மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், 2014, பிரிவு 8-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்துவது குறித்து, முறைமன்ற நடுவரின் முடிவே இறுதியானது.

இந்நிலையில், மனுதாரர் திரு. இராசமாணிக்கம் தான் எதிர்மனுதாரராக குறிப்பிடப்படும் நபர்களை அழைக்கப்படாததன் காரணம் கோரியும் மற்றும் அவ்வாறு அழைக்கப்பட்டால்தான் விசாரணைக்கு வர இயலும் என நிர்பந்தப்படுத்தி எழுத்துபூர்வமாக கடிதம் மூலம் தெரிவித்திருப்பது இம்முறைமன்ற நடுவத்தின் நிர்வாகத்தில் மனுதாரர் தலையீடு செய்துள்ளதையும், நீதிமுறைச் சார்புடைய இம்முறைமன்றத்தின் மாண்பிற்கு உரிய மதிப்பளிக்க தவறிவிட்டதையும் உணர்த்துகிறது. மனுதாரரின் இச்செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மனுதாரர் குடும்பம் உட்பட 6 குடும்பத்தினர் 07.05.2024 நாளிட்ட உறுதிமொழி சான்று பேரூராட்சிக்கு அளித்து தங்களது புல எண். 208/5-ல் பொது நடைபாதை உள்ள சுமார் 200 அடி நீள மண்பாதையில் சிமெண்ட் சாலை அல்லது பேவர்பிளாக் சாலை அமைக்குமாறு பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது அதற்கு ஆதாரமாக திரு. ஈசன் என்பவரின் கிரைய பத்திரம் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் இதற்கிடையில் உறுதிமொழி சான்று அளித்தவர்களில் ஒருவரான திருமதி. தனலட்சுமி என்பவர் மேற்படி புல எண். 208/5-ல் உள்ள பொதுவழி தடத்தில் மனுதாரர் திரு. இராசமாணிக்கம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து நிலத்தடி நீர்தொட்டி கட்டியுள்ளதால், அந்த ஆக்கிரமிப்பை அகற்றி சாலை அமைக்கப்பட வேண்டும் என திருமதி. தனலட்சுமி ஆட்சேபனை தெரிவித்துள்ளதையும் செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேலும் 6 குடும்பத்தினரும் சேர்ந்து உறுதிமொழி பத்திரம் மற்றும் பேரூராட்சிக்கு தானபத்திரம் சமர்ப்பிக்கும்பட்சத்தில் புல எண் 208/5-ல் சாலை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 248/2A-ல் 8 குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட பொது பாதையில் சிமெண்ட் சாலை அமைக்கக் கோரி உறுதிமொழி பத்திரம் மற்றும் நோட்டரி வழக்கறிஞர் மூலம் பொது தடவழி பாத்திய ஒப்பந்த பத்திரம் பேரூராட்சியில் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மற்றும் இதில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்படாததாலும் பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெற்று, 2024-25ஆம் ஆண்டு 15வது ஆணைய நிபந்தனையற்ற மானியம் இரண்டாம் தவணை திட்டத்தின் கீழ் உரிய ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு புல எண். 248/2A-ல் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் 8 குடும்பத்தினருக்கு சொந்தமான புல எண். 248/2A-ல் பொது பாதையை அனைவரும் சேர்ந்து எடப்பாடி சார்பதிவாளர் மூலம் பதிவு செய்யப்பட்ட தானபத்திரத்தை உடன் பேரூராட்சிக்கு அளிக்க இருப்பது குறித்து தெரிவித்திருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாகவும் தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரரின் குடும்பம் உள்பட 6 குடும்பங்களுக்கு சொந்தமான புல எண். 208/5-ல் அமைந்துள்ள பொதுப்பாதைக்கு சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு உரிய விதிகளின் கீழ் வழிவகை உள்ளதா என்பதையும் புல எண். 248/2A-ல் பொது பாதை அமைத்தது குறித்து விதிமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட்டனவா என்பது குறித்தும் பேரூராட்சிகளின் இணை இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் மூலம் கள ஆய்வு செய்து அவரின் அறிக்கையினை மூன்று மாத காலத்திற்குள் பெற்று அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுறுத்தலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. பெ. இராசமாணிக்கம்,
அ. குள்ளம்பட்டி அஞ்சல்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் - 637 101
2) செயல் அலுவலர்,
அரசிராமணி பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/2/26
செயலாளர்
12/2/26